بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *16/12/2022* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய வழிகாட்டல்களின் ஒளியில் துஆவின் உண்மைத்துவம், அதற்கான ஒழுங்குமுறைகள், அதன் அவசியம் மற்றும் அது குறித்து நம்முடைய பொறுப்புகள் பற்றிய எடுத்துரைப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

துஆவைப் பற்றி பல மக்கள் கேள்வி கேட்கிறார்கள். துஆவைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் கேள்விகள் எழுகின்றன. நன்கு சிந்திக்கப்பட்ட திட்டத்தின் கீழ் நாத்திகத்தின் ஆதரவாளர்கள் ஆட்சேபனை எழுப்புகிறார்கள். மனிதனை இறைவனை விட்டும் மார்க்கத்தை விட்டும் தொலைவில் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்யப்படுகிறது.

இத்தகைய நிலையில் நம் மக்கள் மீதும் சிலநேரங்களில் ஷைத்தானிய சிந்தனை தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. குறைவான அறிவுடையவர்களின் உள்ளங்களில் சந்தேகங்கள் உருவாகி விடுகின்றன. சாதாரண சோதனை ஏற்படுவதன் விளைவாக இறையிருப்பு மற்றும் அவன் துஆக்களை ஏற்றுக் கொள்வது குறித்து ஆட்சேபனைகள் உருவாகி விடுகின்றன.

இன்று நான் துஆ எனும் தலைப்பை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் எடுத்துரைப்பேன். ஹுஸூர் (அலை) அவர்களின் எழுத்துக்களில் துஆவின் உண்மைத்துவம், அதற்கான ஒழுங்குமுறைகள், நம்முடைய பொறுப்புகள், துஆவின் தேவை மற்றும் அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை பற்றி மிகவும் விளக்கமாக உள்ளது. நாம் **நல்ல நிலையிலும் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் கஷ்டங்களிலும் நம்முடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்** என்பது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"ஒரு துன்பம் வரும் வேளையில் அஞ்சுவதைப் போல் அமைதியான நிலையில் அஞ்சக்கூடிய மனிதர் மீது அல்லாஹ்வின் கருணை உள்ளது. அமைதியான வேளையில் இறைவனை மறக்காமல் இருப்பவரை இறைவன் துன்ப வேளையில் மறக்கமாட்டான். எவர் அமைதியான காலத்தை சுக போகங்களில் கழிப்பாரோ, மேலும், துன்பத்தின் போது துஆ செய்கிறோரோ

அவருடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. கஷ்டம் வரும் போது, தவ்பாவின் கதவு அடைக்கப்பட்டு விடுகிறது.''

பிறகு, **'துஆ கேட்கும் போது மனிதனின் நிலை எப்படி இருக்க வேண்டும்? துஆவிற்கான ஒழுங்குமுறைகள் யாவை?** ஆகியவற்றை விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவனிடம் கேட்பதற்கு ஒழுங்குமுறை இருப்பது அவசியமாகும். அறிவுடையவர்கள் அரசரிடம் ஏதாவது ஒன்றை வேண்டும் போது ஒழுங்குமுறைகளைக் கருத்தில் கொள்வார்கள். எனவேதான், சூரா ஃபாத்திஹாவில் இறைவன் எவ்வாறு துஆ கேட்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்திருக்கிறான். அதில் اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ என்று கற்றுக் கொடுத்துள்ளான். அதாவது, அகில உலகங்களுக்கும் ரப்பாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் الرَّحۡمٰنِ ஆவான். அதாவது, கேட்காமலேயே, வேண்டாமலேயே வழங்குபவன் ஆவான். அவன் الرَّحِيۡمِ ஆவான். அதாவது, உண்மையான உழைப்பிற்கு சிறந்த பிரதிபலனைத் தருபவன் ஆவான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* 'உண்மையான உழைப்பு' எனும் சொல் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதாகும். உண்மையான உழைப்பிற்கான தரத்தை அல்லாஹ்வே எடுத்துரைத்துள்ளான். அதாவது, ஒரு போர் செய்ய வேண்டி வருகிறது. பிறகு, கூறுகிறான்: مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ அதாவது, இவ்வுலக மற்றும் மறுவுலக நற்கூலியும் தண்டனையும் அவனது கையில் உள்ளன. மனிதன் இந்த அளவுக்குப் புகழும் போது தன் இறைவன் எவ்வளவு பெரியவன் என்ற சிந்தனை அவனுக்கு வருகிறது. அல்லாஹ் முன்னால் இருப்பதாக அறிந்து இவ்வாறு கூறுகிறான்: اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ அதாவது, நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; அல்லது வணங்க விரும்புகிறோம். மேலும், உன்னிடமே உதவி கோருகிறோம்.

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ அதாவது, எவ்வித கோணலும் இல்லாத முற்றிலும் நேரான வழி. குருடர்களின் வழி என்று ஒன்று இருக்கிறது. அதில் கடின உழைப்பும் எந்த விளைவும் வெளிப்படுவதில்லை. எந்த வழியில் நடப்பதால் அருட்கொடைகள் கிடைக்கின்றனவோ அதுவே ஸிராத்தே முஸ்தகீம், அதாவது, நேரான வழியாகும். غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ உனது கோபத்திற்கு ஆளானவர்களின் வழியில் அல்ல. وَلَا الضَّآلِّيۡنَ (உன்னைவிட்டுத்) தொலைவில் சென்றவர்களின் (வழிதவறியவர்களின்) வழியில் அல்ல. அன்னார் கூறுகிறார்கள்: اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்பது உலகம் மற்றும் மார்க்கத்தின் எல்லா வழிகளையும் குறிக்கிறது.

எவ்வாறு அல்லாஹ்வுக்கு எந்த எல்லையும் இல்லையோ அவ்வாறே, அவன் வழங்கும் அந்தஸ்த்து மற்றும் படித்தரங்களிலுக்கும் எந்த எல்லையும் இல்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "துஆ மிகவும் அற்புதமான ஒன்றாகும். ஆனால் வருத்தம் என்னவென்றால், துஆ செய்யச் செல்பவர்களும் அதற்கான ஒழுங்குமுறைகளைத் தெரிந்திருப்பதில்லை. மேலும், இந்தக் காலத்தில் துஆ செய்யக் கூடியவர்களும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளை அறிந்திருப்பதில்லை. இன்னும் கூறுவதாயின், துஆவின் உண்மைத்தன்மையைக் குறித்தே முற்றிலும் அறிமுகம் இல்லாமல் போய் விட்டது என்பதே உண்மையாகும்."

**துஆ செய்யக்கூடியவருக்கு இருக்க வேண்டிய பொறுமையைப் பற்றிக் கூறுகிறார்கள்:** "பாருங்கள்! துஆவின் நிலை எதுபோன்றது என்றால், உதாரணமாக, ஒரு நில உரிமையாளர் வெளியே சென்று தனது வயலில் விதை விதைத்து விட்டு வருகிறார். வெளிப்படையில் பார்க்கும் போது, அவர் நல்லதொரு விதையை வெளியே மண்ணில் புதைத்து விட்டதாகத் தெரிகிறது. ஆனால், அதில் எப்போது பழம் வரும் என்பது அறிவாளியான நிலக்கிழாருக்கு நன்றாகத் தெரியும். அவர் பொறுமையுடன் அதைப் பராமரித்து வருகிறார். அதை நன்றாக கவனித்து வருகிறார். இவ்வாறு அதில் பழம் வரும் அந்த நேரம் வந்து விடுகிறது. மேலும், அது பழுத்தும் விடுகிறது. இதுவே துஆவின் நிலையாகும்." அன்னார் கூறுகிறார்கள்:

"நான் எனது அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். முந்தைய நேர்மையாளர்களது அனுபவமும் இதற்கு சாட்சி பார்க்கிறது. ஏதாவது ஒரு விவகாரத்தில் நீண்ட காலம் வரை மௌனமாக இருந்தால் வெற்றிக்கான நம்பிக்கை இருக்கிறது. இறைவன் கருணையாளனும் நாணம் உள்ளவனும் ஆவான். தனது பணிவான அடியான் ஒரு நீண்ட காலம் வரை தனது அவையில் விழுந்து கிடக்கிறான் என்பதை அவன் பார்க்கும் பொழுது, ஒருபோதும் அவனுக்குத் தீய முடிவை ஏற்படுத்த மாட்டான்.

உதாரணமாக, ஒரு கர்ப்பிணிப் பெண் நான்கு, ஐந்து மாதங்களுக்குப் பிறகு, எனக்கு இப்பொழுது குழந்தை ஏன் பிறக்கவில்லை என்று கூறி, அந்த ஆசையில் ஏதாவது கருக்கலைப்பு மாத்திரையை சாப்பிட்டு விட்டால், அப்பொழுது குழந்தை பிறக்குமா என்ன? குழந்தை வீணாகியே விடும். அல்லது நிராசை அடையச் செய்யும் நிலையில் அவள் மூழ்கி விடுவாள்."

அவ்வாறே **குறிப்பிட்ட நேரத்திற்கு முன் அவசரப்படுபவர் இழப்பே அடைகிறார்.** இழப்படைவது மட்டுமே இல்லை. இன்னும் சொல்வதாயின், ஈமானுக்கும் பெருந்துயரம் ஏற்படுகிறது. இத்தகைய நிலைமைகளில் சிலர் இறைமறுப்பாளர்கள் ஆகி விடுகிறார்கள். அன்னார் கூறுகிறார்கள்:

"பாருங்கள்! ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது சந்ததிகளிலிருந்து அரபு நாட்டில் ஒரு நபி தோன்ற வேண்டும் என்று ஒரு துஆ செய்தார்கள். பிறகு என்ன அது அந்த நேரத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டதா? ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்குப் பிறகு ஒரு நீண்ட காலம் வரை எவருக்கும் அந்த துஆவுக்கான தாக்கம் என்ன ஆனது

என்ற சிந்தனை கூட வரவில்லை. ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றியதன் வடிவில் அந்த துஆ நிறைவேறியது. மேலும், மிகவும் மேன்மையான முறையில் நிறைவேறியது!''

**துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உடலுக்கும் ஆன்மாவுக்குமான தொடர்பு எப்படி இருக்க வேண்டும்** என்பதை விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''வெளிப்படையான தொழுகை மற்றும் நோன்புடன் கலப்பற்ற தன்மையும் உண்மையும் இல்லை என்றால், அது தன்னிடம் எந்தச் சிறப்பையும் கொண்டிருப்பதில்லை. யோகிகளும் சன்னியாசிகளும் கூட தத்தமது இடத்தில் பெரும் பெரும் தவங்கள் புரிகிறார்கள். இந்தத் துன்பங்கள் அவர்களுக்கு எந்த ஒளியையும் மன அமைதியையும் வழங்குவதில்லை. அவர்கள் உடல் தவம் செய்கிறார்கள். அதற்கு அகத்தோடு குறைவான தொடர்பே இருக்கிறது. மேலும், அவர்களது ஆன்மீகத்தின் மீது எந்த ஒரு தாக்கமும் ஏற்படுவதில்லை. ஆனால், திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறியிருக்கிறான்:

لَنْ يَّنَالَ اللّٰهَ لُحُوْمُهَا وَلَا دِمَآؤُهَا وَلٰكِنْ يَّنَالُهُ التَّقْوٰى مِنْكُمْ ؕ

அதாவது, உங்களது குர்பானியின் இறைச்சியும் ரத்தமும் அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை. மாறாக, இறையச்சமே சென்றடைகிறது. உண்மையில், அல்லாஹ் வெளித்தோலை விரும்புவதில்லை. அவன் சத்தை எதிர்பார்க்கிறான்.''

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. இறைச்சியும் ரத்தமும் அவனை சென்றடைவதில்லை; இறையச்சம் மட்டுமே சென்றடைகிறது என்றால், பிறகு குர்பானி செய்வதற்கான தேவை என்ன? இதேபோன்று தொழுகை, நோன்பு ஆகியவை ஆன்மாவோடு தொடர்புடையவையாக இருக்கின்றன என்றால், பிறகு வெளிப்படையாக செய்ய வேண்டிய தேவை என்ன?

அன்னார் கூறுகிறார்கள்: ''எவர்கள் உடலிடம் வேலை வாங்குவதை விட்டுவிடுகிறார்களோ அவர்களது ஆன்மா அவர்கள் சொல்வதைக் கேட்பதில்லை என்பது முற்றிலும் உறுதியான விஷயமாகும். மேலும், அசல் நோக்கமாக இருக்கின்ற அந்தப் பணிவும் அந்தப் பற்றுறுதியும் அவர்களிடம் உருவாக முடியாது. மேலும், எவர்கள் உடலால் மட்டுமே செயல்படுகிறார்களோ, ஆன்மாவை அதில் இணைப்பதில்லையோ அவர்களும் பயங்கரமான தவறில் மூழ்கி இருக்கிறார்கள்.

இறைவன் ஆன்மாவுக்கும் உடலுக்கும் ஒரு தொடர்பை வைத்துள்ளான். மேலும், உடலின் தாக்கம் ஆன்மா மீது ஏற்படுகிறது. உதாரணமாக ஒரு மனிதர் பாசாங்கு செய்து அழ விரும்பினால், அவருக்கு அழுகை வந்தே விடும். இதேபோன்று தொழுகையின் எத்தனை நிலைகள் உடலில் ஏற்படுகின்றனவோ, உதாரணமாக, நிற்பது அல்லது ருகூ செய்வது முதலியவை. அத்துடனேயே ஆன்மாவின் மீதும் தாக்கம் ஏற்படுகிறது. மேலும், எந்த அளவு உடலில் பணிவு நிலையை வெளிப்படுத்துகிறாரோ அதே அளவு ஆன்மாவிலும் ஏற்படுகிறது. இறைவன் வெற்று ஸஜ்தாக்களை ஏற்றுக்கொள்வதில்லை.

ஆனால், ஸஜ்தாவுக்கு ரூஹுடன் ஒரு தொடர்பு இருக்கிறது. எனவே, தொழுகையில் கடைசி தரமாக ஸஜ்தா உள்ளது. மனிதன் பணிவின் உச்சகட்டத்தை அடையும் பொழுது, அந்த நேரத்தில் அவன் ஸஜ்தாவே செய்ய விரும்புகிறான். ஆக, உடலுக்கு ஆன்மாவோடு ஒரு குறிப்பான தொடர்பு இருக்கிறது.'' பிறகு மேலும் விவரித்தவாறு அன்னார் கூறுகிறார்கள்:

''சில மக்கள் தொழுகையில் இன்பம் கிடைப்பதில்லை என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் இன்பம் தங்களது கட்டுப்பாட்டில் இல்லை என்பதையும், இன்பத்தின் தரமும் வேறுபட்டது என்பதையும் அறிவதில்லை. இப்படி நடக்கிறது, ஒரு மனிதன் கடுமையான துன்பத்தில் ஆழ்ந்திருப்பான். ஆனால், அவன் அந்தத் துன்பத்தையும் இன்பமாக கருதுகிறான். அனைத்து இன்பங்களும் நிம்மதியும் துன்பத்திற்குப் பிறகே வருகிறது. எனவே தான் திருக்குர்ஆன் இந்த விதியைக் கூறியுள்ளது: اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا

ஒரு நிம்மதிக்கு முன் துன்பம் இல்லை என்றால், அந்த நிம்மதி நிம்மதியாகவே இருப்பதில்லை. இதைப்போன்றே எங்களுக்கு இபாதத்களில் இன்பம் வரவில்லை என்று கூறக்கூடிய மக்கள் முதலில், அவர்கள் இறை வணக்கங்களுக்காக எந்த அளவிற்குத் துன்பம் மற்றும் துயரத்தை சகித்தார்கள் என்று தம் இடத்தில் சிந்திப்பது அவசியமாகும்.

மனிதன் எந்த அளவுக்குத் துன்பம் மற்றும் துயரத்தைத் தாங்குவானோ அதுவே நிலைமாற்றத்திற்குப் பிறகு இன்பமாக ஆகிவிடுகிறது. மனிதன் தன்னைத் தேவையற்ற துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டு, சகித்துக் கொள்ள முடியாத துன்பத்தை சுமக்க உறுதிகொள்ள வேண்டும் என்பதை நான் குறிப்பிடவில்லை. மாறாக, அவசியமான அனைத்து விஷயங்களுடனும் தயார் ஆகி, சரியான நேரத்தில் தொழுகைகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். தூக்கத்தையும் தியாகம் வேண்டும். தனது வியாபாரங்களையும் தியாகம் செய்ய வேண்டும். மேலும், குறித்த நேரத்தில் தொழுகையை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை உள்ளத்தில் உருவாக்க வேண்டும் என்பது தான் நோக்கமாகும்.''

எப்படிப்பட்ட சில மக்களும் இருக்கின்றனர் என்றால், அவர்கள் தாம் எந்தத் துன்பத்தையும் சகிப்பதில்லை. மேலும், மற்றவர்களிடம் துஆ செய்ய வைத்தால் வேலைகள் நடந்து விடும் என்று கருதுகின்றனர். இதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்திலேயே ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு நபரிடம் கூறினார்கள்:

**''நீங்களும் கவனமாக துஆ செய்தால்தான் என்னுடைய துஆக்களுக்கும் தாக்கமும் இருக்கும்.''**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இன்றைய தினங்களில் மார்க்கம் மற்றும் இறைவனின் எதிரிகள் மற்றும் இறைமறுப்பாளர்களின் முழு கவனமும் இந்த விஷயத்தின் பக்கம் இருக்கிறது. அதாவது, இறைவன் உங்களுக்கு என்ன தந்தான்? மார்க்கத்தின் பலன் என்ன? மார்க்கம் சோம்பேறியாக்குகிறது; மார்க்கம் கற்பனை விஷயங்களை சிந்தனையில் ஏற்படுத்துகிறது ஆகிய விஷயங்கள் உள்ளத்தில்

போடப்படுகின்றன. இந்நிலையில் ஒவ்வோர் அஹ்மதியின் கடமை என்னவென்றால், அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இறைவணக்கங்களைப் பாதுகாப்பதும், துஆக்களில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதுமே ஓர் அஹ்மதியின் பொறுப்பாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

"நம் ஜமாஅத்தினருக்கு அவர்களின் ஈமான் அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளது. இறைவன் மீது உண்மையான நம்பிக்கை மற்றும் இறைஞானம் உருவாக வேண்டும். நற்செயல்களில் சோம்பேறித்தனமும் மந்தமான நிலையும் இருக்கக் கூடாது. ஏனெனில், சோம்பல் இருந்தால் பிறகு, தஹஜ்ஜுத்துக்காக எழுந்திருப்பதோ பெரிய விஷயம். சாதாரண தொழுகைகளுக்காக உளூ செய்வது கூட கஷ்டமாகத் தோன்றுகிறது. அன்னார் கூறுகிறார்கள்:

நற்செயல் ஆற்றுவதற்கான ஆற்றல் உருவாகவில்லை என்றால், நன்மைகளில் ஒருவரை ஒருவர் முந்துவதற்கான உத்வேகம் இல்லை என்றால், உங்களுக்குள் நன்மைகளில் முந்திச் செல்வதற்கான உத்வேகம் இல்லையென்றால், பிறகு, எம்முடன் தொடர்பு ஏற்படுத்தியிருப்பது பலனற்றது."

எனவே, மிகவும் கவலையுடன் நாம் அல்லாஹ்வுடன் நம்முடைய தொடர்புகளை அதிகரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த உண்மையான தொடர்பு ஏற்படும் போது, பிறகு, நாம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளையும் காண்போம். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பும் வழங்குவானாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாக்கிஸ்தான் மற்றும் அல்ஜீரியா மக்களுக்காகக் குறிப்பாக துஆவிற்காகக் கூறிய வண்ணம் இவ்வாறு கூறினார்கள்:*

பாக்கிஸ்தானில் அஹ்மதிகளுக்குக் கஷ்டங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அதே போன்று, அல்ஜீரியாவிலும் இன்றைய நாள்களில் மீண்டும் (எதிரிகளின்) சீற்றம் ஏற்பட்டுள்ளது.

அல்லாஹ் எல்லா இடத்திலும் ஒவ்வோர் அஹ்மதியையும் பாதுகாப்பாக வைப்பானாக! ஒவ்வொரு பிரச்சனையிலிருந்தும் காப்பாற்றுவானாக! எதிரியைத் தோற்று ஓடச் செய்வானாக! ஆமீன்

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ

اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ

یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ

یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)